**Emperor Journal of Classical Tamil Studies**

**ISSN: 2582-2977** **Mayas Publication®** **www.mayas.info**

**Volume-VI** **Issue-XII** **December 2025**

# பண்டைத் தமிழரின் விளையாட்டுகள்

**முனைவர் கு. இராதாகிருஷ்ணன்**
*உடற்கல்வி இயக்குனர்*
*சர் தியாகராயா கல்லூரி*
*சென்னை – 600 021.*

பண்டைத் தமிழர் பொழுதுபோக்கு விளையாட்டுகளாக திறன்விளையாட்டுகள், வீரவிளையாட்டுகள், போட்டிவிளையாட்டுகள் எனப் பாகுபடுத்தி விளையாடி வந்தனர் என்பதப் பற்றி காணலாம்.

ஓட்டப்பந்தயம், எடைதூக்குதல் முதலானப் போட்டி விளையாட்டுகள் உடல்திறன் சோதிப்பதற்கான விளையாட்டுகள் எனலாம்.

போர்க்காலம் தவிர வேறு காலங்களில் போருக்குரிய உத்திமுறைகளை மட்டும் கையாண்டு விளையாடுவது வீர விளையாட்டுகள் எனக் கூறுவதனை அறியலாம்.

போட்டி விளையாட்டுகள் எனப்படும்போது அவை உள்ளரங்கம், புறஅரங்கம் எனப் பாகுபடுத்தி அரங்க விளையாட்டுகள் அனைத்துமே போட்டி விளையாட்டுகள் எனத் திட்டமிட்டனர். பண்டைத்தமிழரின் விளையாட்டுகளைப் பற்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. அவற்றில் அனைவருக்கும் வெளிப்படையாக தெரிந்தது மாடுபிடி விளையாட்டு எனப்படும் ஏறு தழுவுதல் அல்லது சல்லிக்கட்டு மட்டும்தான்.

ஆனால், சங்க இலக்கியங்கள் பெண்களின் விளையாட்டு ஆண்களின் விளையாட்டு என இரண்டாகப்பகுத்து விளையாடியதை ஆங்காங்கே குறிப்பிடப் ட்டுள்ளதனை அறியலாம்.

விளையாட்டு என்பது மகிழ்ச்சியோடு தொடங்கி மகிழ்ச்சியோடு நிகழ்ந்து மகிழ்ச்சியோடு முடிவது என க. பெருமாள் (விளையாட்டுக்கலை v.9) கூறுகின்றார்.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அறிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற ஏழு பருவ மகளிர் தத்தம் வயது நிலைக்கேற்ப ஊசல், அம்மானை, கழங்கு, நீராடல் என்று பல விளையாட்டுகளை விளையாடினார்கள் என்பதை சங்க இலக்கியங்களில் காணமுடிக்கின்றது.

பூம்புகார் நகரத்தில் மீனவர்களின் குழந்தைகள் மணலில்படர்ந்த அடம்பம்பூக்களையும், நீரில் நிற்கும் ஆம்பல் பூக்களையும் பறித்துச் சூடிக்கொண்டு மன்றில் ஆட்டுக் கிடாய், கவுதாரி போர்களைக் கண்டு களிந்துள்ளனர். உவா நாளில் (முழுநிலா நாளில்) மீன்பிடிக்கச் செல்லாமல் பொழுது போக்காக பனங்கள்ளையும் நெறகள்ளையும் உண்டு விளையாடினர் என்ற குறிப்பைப் பட்டினப் பாலை (101-77) வரலாற்றுப் பதிவாகவே இயம்பும்

மேலும் சங்க இலக்கியங்களில் மிகுதியான விளையாட்டுகள்
இடம்பெற்றுள் ளன. ஆண்கள் விளையாட்டு -10, பெண்கள் விளையாட்டு - 15, இருபாலர் விளையாட்டுகள் 12 என மொத்தம் 37 விளையாட்டுகள் எனக் காணப்பெறுகின்றன.

சங்ககால ஆடவர்கள் (ஆடவர்கள் என்ற சொல்லுக்கே போர்க்களத்தில் நிற்கும் வீரர்கள் என்று பெயர்) தங்கள் ஓய்வு நேரத்தில் வீரத்தைப் புலப்படுத்தும் நோக்கில் விளையாட்டுகளை அமைத்துக்கொண்டனர். அதன்படி ஏறு தழுவுதல், குதிரை ஏற்றம், யானை ஏற்றம், வில், வட்டு, கவண், வல்லாட்டம் போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டனர்.

முல்லை நில மக்களான ஆயர்களிடையே மணவினைச்சடங்குகளில் ஒன்றாக ஏறுதழுவுதல் முதன்மையானதாகவே குறிக்கப்பட்டுள்ளது.

**எழுத்துகள்**
**ஏற்றனர் மார்பு**
**கவிழ்ந்தன மருப்புக்**
**கலங்கினர் பலர்**
**அவருள் மலர் மலிபுகழ் எழு**
**அலர்மலி மணிபுரை நிமிர் தோல் புணை**
**எழுத்தோடு அமரிதைத் தோன்றினன் (கலி: 102)**

என்ற பாடலடிகள் ஏறுதழுவுதலையும் அது நடக்கும் இடத்தினையும், குறிப்பபிடுகின்றது. மேலும், காளையைரைக் கண்டு அஞ்சும் ஒருவனை மணம் முடிக்க முல்லை நிலப் பெண்கள் விரும்புவாரில்லை என்பதைக்

**"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**
**புல்லாலே ஆயமகள் (கலி: 103:63-64)**

என்ற படலடி விளக்குகின்றது.

அசதியாடல், என்பது ஓரிருவரின் துணைக்கொண்டு விளையாடும் விளையாட்டு ஆகும். இதில் வல்லுப்பலகை என்பது இடம்பெற்றுள்ளது. 'வல்லுப்பலகை' என்பது தற்காலத்தில் சதுரங்க விளையாட்டு எனலாம்.

**"வல்லுப்பலகை எடுத்து நறுத்தன்ன**
**கல்லாக் குறன கரடும்பகல் வந்தெம்மை**
**இல்லத்து வானவென மெய்தொளீ இ யெல்லாநின்**
**பெண்டிருளர் மன்னோ கூறு" (கலி -94 :13-16)**

என்ற அடிகளின் வழி குறளனும் கூனியும் வல்லுப்பலகை நிறுத்தியது போல வரைநின்று உரையாடுவது அசதியாடல் எனப்படுகிறது.ப

வல்லாட்டம் என்பது சதுரங்கத்தைக் குறித்தது என்பதற்கு அகழாய்வுச் சான்றுகளும் கிடைத்துள்ளன. கீழடி - 4 கையேட்டில் (அரசு வெளியிட்ட கையேடு) 80 க்கும் மேற்பட்ட சதுரங்கக் காய்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது திறமையை வெளிப்படுத்தும் விளையாட்டுகளில் ஒன்று. என அறியலாம். இதன்படி பல்வேறு அளவிலான காய்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வல்லுப்பலகை பற்றிய குறிப்பை அகநானுறு பாடலடியும் இயப்புகின்றது.

**" நரை மூதாளர் அதிர்தலை இறக்கி**
**கவைமனத்து இருத்தும் வல்லு வனப்பு அழிய**
**வரிநிற சிதலை அரித்தலின் புல்லென்று**
**பெருநலம் சிதைந்த பேஎம் முதிர்தியில் பரல -**
**(அகம் 377-7-10)**

இப்பாடலடி மூத்தோர் சேர்ந்து வல்லுவிளையாட்டு விளையாடினர் என்பதனை அறிவுறுத்திகின்றது.

சங்ககாலத் தமிழர் சமூகம் சார்ந்த செயற்பாடாகவே விளையாட்டையும் கருதினர். குழுநிலையான விளையாட்டுகளையும் பொதுவெளி நடுவில் இடம்பெற்ற வீர விளையாட்டுகளையும் சமூகச் செயற்பாடாகவே கருதினர்.

சிறுமியரும் பெண்களும் வீட்டில் அடையாமல் தோழியரோடு, விளையாடுவதே அறம் என்றும், உடலும் உள்ளமும் அப்போதுதான் போதிய வளர்ச்சி பெரும் என்றும் கூறும் செய்தியை நற்றிணைப் பாடல் (68) உணர்த்துகிறது.

**“விளையாடாயமொடு ஓரையாடாது,**
**இளையோர் இல்லிடத்திமற் செறிந்திருத்தல்**
**அறனும் அன்றே ஆக்கமுந் தேயம் ஆன”**

என்று குறிப்பிடுவதன் வாயிலாக பெண்கள் விளையாட்டு ஒரு சமுக செயல்பாடாகவே அன்று போற்றப்பட்டதனை அறியலாம்.

மேலும், இத்தகைய விளையாட்டின் போது மண்ணில் புதைத்து விளையாடிய ஒரு புன்னை விதை வளர்ந்து அதனைச் சீராட்டி வளர்த்த ஒரு பெண் தன் மகளுக்கு அப்புன்னை மரம் அக்காள் உறவு என்று கூறி வளர்த்தாள். அந்த மகள் தன்காதலனோடு பேசுவதற்கு அங்கு வந்த போது தன் அக்காள் முன் உன்னுடன் பேசக் கூச்சமாக இருக்கிறது என்று சொல்லி வேறு இடம் தேடிச் சென்றாள் என்ற நற்றிணைப் பாடற்குறிப்பு கூறுகிறது.

இவ்வாறு விளையாட்டுகள் இயற்கையோடு இணைந்த ஒரு செயல்பாடாகவும், சமூகமயமாக்கப்பட்ட ஒரு செயல்பாடாகவும் இன்று பன்னாட்டு செயல்பாடாகவும் தொடர்ந்து அமைந்திருப்பதற்கான ஊற்றுக்கண்ணைத்

தமிழ்ச் சமூகம் தொடர்ந்து பெற்றிருக்கிறது என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

அசதியாடல், அம்புலியழைத்தல், அலவன் ஆட்டம், உலாவல், ஊசல் எண்ணி விளையாடல், ஏதிரொலி கேட்டல், ஏறுகோள், கண்புதைத்து ஒளித்திடல், கவண், கழங்கு, குதிரை ஏற்றம், யானை ஏற்றம், குரவை, குறும்பு விளையாட்டு, காமவிளையாட்டு, சிறுசோறு, சிறுதேர், சிறுபறை, சிற்றில் செய்தல், சுன்னை விளையாட்டு, சூது, செடி கொடி வளர்ப்பு, நீர் விளையாட்டு, பந்து, பறவை கலால் காணூந்தம் அவற்றின் செயல்களும், போலச்செய்தல், பறவை வளர்ப்பு, விலங்கு வளர்ப்பு, பாவை விளையாட்டு, பசி, தொழ விளையாட்டு, புள் ஓட்தல், மணற்குவியலில் மறைத்திடல், மரச்செய்தல், மாலை விழா எடுத்தல், மல், வட்டு, வள்ளை, வில், வேட்டை, ஆகியனவாக காணப்படுகின்றன.

இங்கனமாக பண்டையத் தமிழர்களின் விளையாட்டு திறன் பல்வேறு சான்றாக்கங்களோடு நமது இலக்கியங்கள் வெளிப்படுத்துவது நமக்கான பெருமையாகவே அமையும்

## துணை நின்ற நூல்கள் :


1. தமிழக வரலாறும். மக்களும் பண்பாடும் - கே கே பிள்ளை
2. பண்பாட்டு அசைவுகள் தொ. பரமசிவன்
3. தமிழர் நாடகமும் பண்பாடும் - அ.தட்சிணாமூர்த்தி
4. சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம் - சு.சிவகாமி சுந்தரி
5. நற்றிணை
6. கலித்தொலை
7. புறநானுறு